# டாக்டர் வெங்கடேஷ்?

## திடீர் டென்ஷனில் டி.டி.வி. தினகரன்!

யான உசிலம்பட்டி, சோழவந் தான் ஆகியவற்றில் முக்குலத் தோர் சமுதாயமே முதலிடம். இதனால் வெங்கடேஷ் வெற்றி பெற வேறு என்ன வேண்டும் என்கிறதாம் அந்த சர்வே. இந் தப் பின்னணியில், 'சின்னம்மா வின் சிபாரிசோடு தேனி தொகுதி வேட்பாளராக வெங்க டேஷை அம்மா அறிவிப்பார்' என்று நம்பிக்கையோடு சொல் கிறது அந்த வட்டாரம்.

இதற்கிடையே தேனி மாவட் டத்தை சொந்த பட்டா நிலம் போலக் கருதியவர் டி.டி.வி. தினகரன். அங்கு இன்னொரு வர் வந்து உழவடை செய்ய நினைத்தால், அதைப் பார்த்துக் கொண்டிருப்பதற்கு யாருக்குத் தான் மனசு வரும்? வெங்க டேஷ் போட்டி என்பது கிட் டத்தட்ட ஆக்கிரமிப்பாகவே இருக்கும் என்கிறார்கள் தேனி மாவட்ட அ.தி.மு.க. தொண் டர்கள்.

பெரியகுளம் தொகுதியில் ஏற் கெனவே இரண்டு முறை போட்டி போட்டவர் டி.டி.வி. தினகரன். கட்சியில் சேடபட்டி முத்தையாவை ஓரங்கட்டுவதற் காக அவர் களத்திற்குக் கொண் டுவரப்பட்டதாக அப்போது சொல்லப்பட்டது. அதேபோல சேடபட்டி ஓரங்கட்டப்பட்ட தோடு, முதல் முறையாக வெற்றி பெற்று பெரியகுளம் தொகுதி யில் எம்.பி. ஆனார் டி.டி.வி. ஆனால் இரண்டாவது தடவை யான போட்டியில் ஹாரூணி டம் தோற்றுப் போனார். சுமார் இருபதாயிரமே வாக்கு வித்தி யாசம். இருந்தாலும் தினகர னின் தோல்வியைக் கண்டு, எதிர்கட்சி வட்டாரமே அனுதா பப்பட்டது. அந்த அனுதாபம் இப்போதுவரை நீடிப்பதாகவும் சொல்கிறார்கள்.

தேர்தல் தோல்விக்குப் பிறகு கட்சியில் தனக்கு இருந்த செல் வாக்கால் ராஜ்யசபா எம்.பி. ஆனார் தினகரன். இன்னும் ஒண்ணரை ஆண்டுகளுக்கு அவர் அந்தப் பதவியில் இருக்க லாம் என்றாலும், நடக்கவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் அது வும் தேனி தொகுதியிலேயே போட்டியிட ஆசைப்படுகிறா ராம்.

"தொகுதியில் இன்னொருவர் போட்டியிடுவது, பிறகு அந்த நபரே தக்கவைத்துக் கொள்ள நேரிடும் என்று கணக்குப் போடுகிறார் தினகரன்" என்று சொல்லும் அவரது ஆதரவு வட் டாரம், "கடந்த சில மாதங்க ளாக தினகரன் தேனி மாவட் டத்திகு வருவதில்லை என்றா லும், பெரியகுளத்தில் அலுவல கம் செயல்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது. கட்சிக்காரர் களும் அங்கு போய் வருகிறார் கள். சில சமயம் கட்சியின் ஆலோசனைக் கூட்டங்களே அங்குதான் நடைபெறுகிறது. ஆக எப்படிப் பார்த்தாலும் தேனி மாவட்டத்தையும், தினக ரனையும் பிரிக்க முடியாது. மீண்டும் அவரே போட்டியிட வேண்டும். இதை கட்சிக்காரர் கள் மட்டுமில்லாமல் மக்களும் விரும்புகிறார்கள். ஏனென்றால் டி.டி.வியின் அணுகுமுறையை வெங்கடேஷிடம் நாங்கள் எதிர் பார்க்க முடியாது" என்கிறார் கள்.

இந்நிலையில், 'தேனியில் இன் னொருவர் போட்டியிட்டால் பிறகு எனக்கென்ன மரியாதை?' என்று தினகரனே ஒரு கட்டத் தில் கேட்டதாகவும் தகவல் உண்டு.

இது ஒருபுறமிருக்க, "இது பூவா, தலையா விளையாட்டு. பூ விழுந்தாலும் வேலை பார்க்க ணும்; தலை விழுந்தாலும் வேலை பார்க்கணும். இதுதான் தேனி மாவட்ட அ.தி.மு.க. தொண்டர்களின் தலைவிதி. எப்படியிருந்தாலும் மன்னார் குடி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வர்தான் வேட்பாளராக வரப் போகிறார். அது தினகரனா அல்லது வெங்கடேஷா என்ப துதான் கேள்வி. ஆனால் அம் மாவுக்கு யார் மீது நம்பிக்கை அதிகம் இருக்கிறதோ, அவரே தேனி தொகுதியில் வேட்பா ளர். இரண்டு பேரும் இல்லை என்றானால் தங்க தமிழ்ச்செல் வனுக்குத்தான் அடுத்த சான்ஸ்.

எங்களைப் பொறுத்தவரை தினகரன் போட்டியிட்டால், தேனியை அ.தி.மு.க. சந்தேக மில்லாமல் கைப்பற்றும். அதே சமயம் வேறு ஒருவரை நிறுத்தி னால், அதே தினகரன் அந்த வேட்பாளரின் கையைப் பிடித் துக் கொண்டு தொகுதிக்குள் பிரச்சாரம் செய்ய வேண்டும். அப்போதுதான் ஓட்டு விழும். இல்லையானால் எதிராளிக்குத் தான் கொண்டாட்டம்" என்று சொல்லி முடித்த ர.ர.க்கள், "தினகரனுக்கு வெங்கடேஷ் மைத்துனர் முறை வேண்டும். அந்த மைத்துனர் போட்டியிட் டால் அவரது விரலைப் பிடித் துக் கொண்டு தினகரன் தேர்தல் பிரச்சாரம் செய்வாரா என் பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்" என்றும் கொக்கி போடுகிறார்கள்.